# பலதாரமணம் குறித்து இரண்டாம் தாரங்களின் கருத்து நிலை: கிண்ணியா பிரதேசநிலை பற்றிய ஆய்வு

## Second Wive's Perception on Polygamy: A Case Study Based on Kinniya Division

M.M. Shiyana[1] & M.I.M. Jazeel[2]

[1]Assistant Lecturer, Dept. of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2]Senior Lecturer, Dept. of Islamic Studies, South Eastern University of Sri Lanka
shiyana@seu.ac.lk, Jazeelmi@seu.ac.lk

**ஆய்வு சுருக்கம்**

பலதாரமணம் அதன் பொருத்தப்பாடு பெண்களின் வாழ்வில் அது ஏற்படுத்தும் தாக்கம் என்பன சமீபத்தில் பல ஆய்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பெண் உரிமை, முன்னேற்றம் இயக்கங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்நிலையில் இவ்வாய்வானது கிண்ணியா வாழ் பலதாரகுடும்பங்களைச் சேர்ந்த இரண்டாம் தாரங்களுக்கு மத்தியில் பலதாரமணம் குறித்த கருத்து நிலை தொடர்பில் பகுப்பாய்கிறது. பலதார குடும்பத்திலுள்ள இளைய தாரங்களுடன் ஆழ்ந்த நேர்காணல்கள் நடத்தப்பட்டு பெறப்பட்ட தரவுகளின் குறியீட்டு பகுப்பாய்வினை முதன்மையாகப் பயன்படுத்தும் இந்த ஆய்வு கோட்பாட்டு அமைப்புத்திட்டத்தை நிறுவ இலக்கியங்களை மீளாய்வுக்குட்படுத்தியுள்ளது. பலதாரமணம் தொடர்பான நோக்குகளை தங்கள் வாழ்க்கை அனுபவங்களின் ஊடாக முன்வைப்பதில் இளைய தாரங்களுக்கு மத்தியில் வேறுபட்ட கருத்து நிலைகள் உள்ளன. பெரும்பாலான இளைய தாரங்கள் பலதாரமணத்துக்கு ஆதரவினை வழங்கியுள்ளனர். இதன்படி சொந்த நலன்கள், மறுமணத்திற்கான விருப்பம், மண முறிவு மற்றும் சமய அங்கீகாரம் ஆகியவற்றின் ஒன்று அல்லது சிலதின் இணைப்புகளை காரணங்கள் காட்டுகின்றனர். கணவன் மனைவி மற்றும் பெற்றோர் பிள்ளை உறவு நிலைத் திருப்தி இந்நிலையை நன்கு வெளிப்படுத்துகிறது. மறுபுறம் பலதார குடும்பத்திலுள்ள இணை மனைவிக்கான முன்னுரிமை இழக்கப்படல், கணவனை பகிர்வதிலுள்ள மனச்சிக்கல்கள், சமூக வடுக்கள் என்பன பலதாரமண வாழ்வை குறைமதிப்பிற்கு அவர்களை உட்படுத்துகின்றன. பலதாரமணம் மூலம் குறிப்பாக பெண்கள் உள சமூக நெருக்கடிகளுக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம் இருப்பதால் இதனை நடைமுறைப்படுத்துவது பொறுத்தமற்றது எனும் கருத்தாக்கம் நிலவுகிறது. அதேவேளை ஒப்பீட்டளவில் பெரும்பாலான இளைய தாரங்களுக்கு, மத்தியில் பலதாரமணமானது பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது எனும் கருத்துநிலையும் மேலோங்கிக் காணப்படுகிறது. சக மனைவிகளுக்கிடையிலான போட்டி மற்றும் பொறாமைகள் குடும்ப வன்முறைகளுக்கு வழிகோலுவதோடு இளைய தாரங்களின் சமூக அந்தஸ்து மற்றும் பங்கேற்பு நடைமுறையில் குறைவாகக் காணப்படுகின்றது. மேலும் பலதாரமண அனுமதி மூலம் இஸ்லாம் பெண்களின் நிலையை சௌகரியப்படுத்தியுள்ளது என்பதில் அதிகமான பெண்கள் உடன்படுகிறார்கள். பெண்களின் உரிமை, முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் கோரல்களை மதிப்பிடும் ஆய்வுகளுக்கும் பலதாரமணம் தொடர்பில் முஸ்லிம் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டல் போன்ற பரிந்துரைகளுக்கும் இந்தக் கட்டுரை அறிவுறுத்தல்களை வழங்கவல்லது.

**திறவுச் சொற்கள்:** பலதாரமணம், இலங்கை முஸ்லிம்கள், முஸ்லிம் பெண்கள்

## 1. ஆய்வுப் பின்னணி

திருமணமானது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் திருமண வடிவங்களில் ஒன்றான பலதாரமணம் என்பது ஒரு கணவர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனைவிகளுடன் சம்பந்தப்பட்ட திருமணங்களை அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கப்பட்ட குடும்ப கட்டமைப்பினைக் குறிக்கிறது (சல்மான், 2003). மானுடவியலாளர்களின் கருத்தின்படி பலதாரமணம் என்பது பல மனைவிகளை உள்ளடக்கிய திருமண உறவாக கணிக்கப்படுகிறது (Krenawi, 1997). உலகெங்கிலும் உள்ள 850 சமூகங்களில் பலதாரமணம் பரவலாக நடைமுறையில் உள்ளது

(சல்மான், 2003). ஆண்களின் அதிக இறப்பு விகிதங்கள், பாலியல் ஆசைகள், போர் மற்றும் அதிக குழந்தைகளுக்கான நாட்டம் ஆகியன பலதாரமணத்துடன் தொடர்புபட்டிருப்பதாக அறியமுடிகிறது (Mabaso, 2018). துருக்கி, சைப்ரஸ், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பலதாரமணம் சட்டவிரோதமானது என்றாலும் இந்த திருமண வழக்கம் மத்திய கிழக்கு, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஓசியானிக் கலாசாரங்களில் நடைமுறையில் உள்ளதனைக் காணலாம் (கர்னாவி, கிரகம், 1997). ஈராக், சிங்கப்பூர் மற்றும் மலாய் மாநிலங்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை திருமணம் செய்வதற்கு முன்பு ஒரு ஆண் நீதிமன்ற அனுமதி பெற வேண்டும் என கருதப்படுகிறது (ஹீதர், 2005). நவீன சமூகங்களில் பலதாரமணத்தின் பொறுத்தத்தை பற்றி பல விவாதங்கள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இடம் பெற்று வருவதனை அறியக்கூடியதாகவுள்ளது (Hasimian,2020). பெண்ணியவாதிகளுக்கு மத்தியில் பலதாரமணமானது அடிப்படையில் மனித உரிமைகளுக்கு பிரச்சினையாக இருப்பதாக கருதப்படுகிறது (ஆரிப், பத்மா, 2008). எனினும் கிராமப்புறங்களில் தொழில் செய்ய வேண்டிய பெண்களுக்கு பலதாரமணம் உதவியாக இருக்கும் என்றும் சில சமூகங்களால் நம்பப்படுகிறது (sulthana, 2010). அலி, ஒஸ்லம் (2013) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பலதார மற்றும் ஒற்றைத்தார மனைவிகளிடையே சமூகவியல் மாறுபாடுகள் மற்றும் மனச்சோர்வு ஆகியன குறிப்பிடத்தக்களவில் இருப்பதாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன. மேலும் சல்மான் மற்றும் பலரால் (2002) மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் குழந்தைகளின் நடத்தை, கல்வி ஆகியவற்றில் பலதாரமணத்தின் தாக்கங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளன. எனவே பலதாரமண வாழ்வில் சாதகமான அனுபவங்களைக் கொண்டவர்கள் திருமணத்தை சாதகமாகவும் சாதகமற்ற அனுபவங்களைக் கொண்டவர்கள் இத்திருமணத்தை சாதகமற்றதாகவும் கருதுகின்றனர் (Armiya, 2017). இலங்கையை பொறுத்தவரையில் முஸ்லிம்களின் திருமண விவகாரங்கள் 1951 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. இதன்படி ஒரு முஸ்லிமான ஆண் 4 பெண்களை திருமணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது (சூளனி, 2009). மனைவியரிடத்தேயும் பிள்ளைகளிடையேயும் நீதமாக நடப்பதை உறுதி செய்யும் வகையில் ஒரு கணவன் பொருளாதார பலம் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்துநிலையையும் இலங்கை முஸ்லிம் பெண்களுக்கு மத்தியில் உள்ளதாக அறிய முடிகிறது (ஹஸனாஹ், 2015). எனவே பலதாரமணம் பற்றிய கருத்துக்களில் பெண்கள் மத்தியில் ஒருமுகத்தன்மை காணப்படாமல் இருப்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய பிரச்சினையாகும். ஆய்வுப்பிரதேசமான கிண்ணியாவானது திருகோணமலை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களை பெரும்பான்மையானவர்களாகக் (77,945) கொண்ட ஓர் பிரதேசமாக விளங்குகிறது. இங்கு விவசாயம் மற்றும் மீன்பிடிப்பு என்பன முக்கியமான ஜீவனோபாயமாக விளங்குகின்றன. (கிண்ணியா பிரதேச செயலக அறிக்கை, 2018). மேலும் பலதாரமணம் தொடர்பில் கிண்ணியாவிலுள்ள முஸ்லிம் பெண்களிடையே பலதரப்பட்ட கருத்துக்கள் இருப்பதாக அறிய முடிகிறது. இந்நிலையில் பலதாரமணம் குறித்து கிண்ணியா வாழ் பலதாரகுடும்பங்களைச் சேர்ந்த இரண்டாம் தாரங்களின் கருத்து நிலையை ஆராய இவ்வாய்வு முனைகிறது.

## 2. ஆய்வு முறை

பண்புரீதியான இவ்வாய்வின் முதலாம் நிலைத்தரவுகள் எனும் வகையில் அவை கிண்ணியா பிரதேச பலதார குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாம் தாரங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான தகவல்களை பெற இலக்கிய மீளாய்வுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிக்கோள் மாதிரி முறையில் 11 பெண்களிடம் நேர்காணல்கள் நடத்தப்பட்டுள்ளதோடு அவை குறியீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ள. எனவே பலதாரமணம் குறித்து இரண்டாம் தாரங்களின் கருத்து நிலையை பரிசீலித்தல் இவ்வாய்வின் நோக்கமாக இருக்கிறது.

## 3. கலந்துரையாடல்கள் மற்றும் கண்டறிதல்கள்

### 3.1. குடும்ப வாழ்வு

மனிதகுலம் அடியெடுத்து வைக்கும் மிக முக்கிய அமைப்பாக விளங்கும் குடும்பமானது ஒத்துழைப்பு, பரோபகாரம், விட்டுக்கொடுப்பு, தாராள மனப்பான்மை போன்ற அம்சங்களை பெற்றிருத்தல் அவசியமாகும். மனிதனது தேவைகளையும் உள்ளுணர்வுகளையும் பூர்த்தி செய்வதற்காகவே குடும்பம் உருவாக்கப்படுகின்றது (அஸ்கர், 2016). பலதார குடும்பங்களைச் சேர்ந்த இளைய தாரங்கள் பலதாரமண வாழ்வு தொடர்பிலும் கணவர்களுடனான உறவுநிலை, சக மனைவிகளுடனான உறவு நிலை, பெற்றோர் பிள்ளை உறவு நிலை தொடர்பிலும் பகிர்ந்து கொண்டனர். சுயவிருப்பம், விவாகரத்து, குடும்ப பிரச்சினைகள், சமூக இடைவினைகள் என்பன பலதாரமணத்துக்குரிய பின்னணிகளாக இருப்பதனை இளைய தாரங்களின் பதில்களில் இருந்து அறிய முடிந்தது. அநேகமான இளைய தாரங்கள் ஏற்கனவே விவாகரத்து பெற்றவர்களாக இருக்கின்றனர். பலதார குடும்பங்களிலுள்ள கணவர்களின் தொழில்களை பொறுத்தவரை அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், சிறு வணிகர்கள், சில்லறைக்கடை வியாபாரி, மீன் வியாபாரிகள், வாகன ஓட்டுனர் போன்று வேறுபட்டு அமைகின்றன. பலதார குடும்பங்கள் அனைத்தும் கருக்குடும்பமாக உள்ளதுடன் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் ஐந்து பேராகவும் அவர்களுக்கென்ற பிரத்தியோகமான வீடுகளில் வசிப்பவர்களாகவும் உள்ளனர். பலதாரமணியாளர்களின் கல்வி நிலையினைப் பொறுத்தவரை அதிகமானோர் இடைநிலைக் கல்வியை கற்றவர்களாகவும் அநேகமானோர் உயர் கல்வியையும் ஒரு சிலர் கல்வியற் கல்லூரியில் படிப்பை பூர்த்தி செய்தவர்களாகவும் உள்ளனர். ஆதிகமான இளைய தாரங்களின் திருமணங்கள் முதல் மனைவியின் சம்மதமின்றியும் ஒரு சில திருமணங்கள் வீட்டாரின் ஒப்புதலின்றி வெளியூர்களில் நடைபெற்றதாகவும் அறியமுடிகிறது. பொருளாதார நிலைகளைப் பொறுத்தவரை பெரும்பாலான குடும்பங்கள் மாதாந்தம் ரூபா 40000/ வருமானத்தையும் ஒரு சில குடும்பங்கள் ரூபா 70000/ க்கு மேல் மாத வருமானத்தை பெறுபவையாக இருக்கின்றன. பலதாரமணத்தின் பொருத்தம் குறித்து பல கருத்துக்கள் பெண்கள் மத்தியில் நிலவினாலும் பொருளாதார வளங்களை ஆண்கள் கொண்டிருக்கும் பட்சத்தில் இத்திருமண முறையினை ஏற்கும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் (borgerhoff, 1992).

### 3.2. கணவன் மனைவிக்கு இடையிலான உறவு

சமகால மானுடவியலாளர்களும் கூட பலதார குடும்பங்களில் உள்ள பாலின பாத்திரங்கள் மற்றும் குடும்ப உறவுகள் குறித்து ஆராய்கின்றனர். இதில் சக வாழ்க்கைத்துணைவர்களுக்கு இடையிலான உறவு நிலைகள், ஒத்துழைப்பு, பெண்கள் மற்றும் பிள்ளைகளின் நலன் உரிமைகள் ஆகியன அடங்குகின்றன (அதி, 1984). பெரும்பாலான மனித சமூகங்களில் பெண்கள் பாதுகாப்பு கருதி ஆண்களை அதிகம் சார்ந்து இருக்கிறார்கள் (ஹீதர், 2005). எந்தவொரு மனிதனின் கூரையின் கீழ் அவள் அவரை திருமணம் செய்து கொள்ளாவிட்டால் அவருடனான தடை செய்யப்பட்ட உறவுக்குள் அவள் நுழையலாம். எனவே பெரும்பாலான இளைய தாரங்கள் தாம் சுயவிருப்பின் பேரில் தான் பலதாரமண வாழ்வில் நுழைந்ததாகக் குறிப்பிடுகின்றனர். ''நான் இரண்டாவது மனைவியாக இருக்க ஒப்புக்கொண்டேன். ஏனென்றால் நான் என் கணவரை நேசித்தேன். தனியாக இருப்பதை விட பலதாரமண வாழ்வில் இருப்பதை விரும்பினேன்'' (நபர் A, 2020).

கணவன் மனைவிக்கு இடையிலான உறவு நிலைகளைப் பொறுத்தவரை அதிகமான இளைய தாரங்கள் தமது கணவருடன் மகிழ்வாக இருப்பதாகவும் சகல விதத்திலும் தமது கணவர் தமக்கு ஆதரவு தருவதாகவும் வெளியில் பிரச்சினைகள் இருந்தாலும் தமது கணவரின் ஆறுதலும் ஒத்துழைப்பும் தமக்கு பலமாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். எனவே பலதாரமணமானது பெண்களுக்கு பாதுகாப்பினை வழங்குகிறது என்பதே பெரும்பாலான இளைய தாரங்களின் கருத்து நிலையாக இருக்கிறது. ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பலதாரமண குடும்பத்தில் வேறுபட்ட அளவுகளில் மாறுபட்ட பாத்திரங்களை வகிக்க வேண்டிய கடப்பாட்டிலுள்ளார். இதில் நிதி ரீதியாக ஆதரிக்கும் திறன் முன்னிலை பெறுகிறது (ஹீதர்,2005). வீட்டிலுள்ள ஒவ்வொரு மனைவிக்கான தேவைகளையும் பொதுமைப்படுத்தி அளவிட முடியாது. வாழ்க்கையில் பலதாரமணம் வகிக்கும் பங்கின் அடிப்படையில் அதனை நடைமுறைக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கருதும் பெண்கள் இருக்கவே செய்கிறார்கள்.

ஏனெனில் ஒவ்வொரு சூழலிலும் வாழும் பெண்கள் பலதார அணுகுமுறைகள் குறித்து வெவ்வேறு நம்பிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடுகளின் வெளிச்சத்தில் இருந்து அவை பிறக்கின்றன. இஸ்லாமிய திருமண எல்லைக்குள் ஒரு கணவனின் பாலியல் தேவைப்பாடுகள் மனைவி அவரை மறுக்காத ஒரு உரிமையாக கருதப்படுகிறது. ஒரு பெண் தன் கணவனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய வாய்ப்பு பலதார குடும்பங்களில் அதிகம் என்றே கூறலாம். பெரும்பாலான இளைய தாரங்களின் கருத்து நிலையின்படி முதல் மனைவியுடன் கணவனை பகிர்ந்து கொள்ளல் அவ்வளவு விரும்பத்தக்கதல்ல எனக் குறிப்பிடுகின்றனர். இன்னும் தமது கணவர் மூன்றாவது திருமணம் செய்து கொள்வதையும் தாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்பதும் பெரும்பாலான இளைய தாரங்களின் கருத்து நிலையாக இருக்கிறது. மேலும் முதல் மனைவியை விடவும் தன் கணவர் தன் மீது காட்டும் அன்பும் ஆதரவும் தம் வாழ்வை நீட்டிச் செல்ல துணையாக அமையும் வளமாகக் கருதுகின்றனர். பொதுவாக இளைய தாரங்களுக்கு குடும்பத்தின் செயற்பாடுகளிலும் முடிவெடுக்கும் வாய்ப்பு அதிகமாக இருப்பினும் அன்றாட வீட்டுத் தேவைகளுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புகள் குறைவாகும். ஆண்களை விட பெண்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாலும் ஒரு பெண்ணின் வயது காரணமாக கருவுற முடியாவிட்டால் இரண்டாவது பெண்ணை எடுப்பதன் மூலம் அத்தகைய சூழ்நிலை சரி செய்யப்படலாம் (ஹீதர் 2005). என்ற காரணங்களாலும் ஒரு கணவனின் முதல் மனைவி கணவனுக்குரிய தேவைகளை ஒழுங்காக நிறைவேற்ற தவறுகின்ற போது அவ்வாய்ப்பு மற்றைய பெண்ணுக்கு கிடைப்பதாலும் விவாகரத்தான பெண்களுக்கு மறுமணம் செய்ய சந்தர்ப்பம் அமைவதாலும் பலதாரமணம் நன்மை பயக்கும் என்றும் பெரும்பாலான இளைய தாரங்கள் குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமன்றி ஒரு ஆண் மற்றுமொரு திருமணம் செய்வது மதச்சுதந்திரம் என்றும் குறித்த சூழ்நிலைகளில் பலதாரமணத்தினை அனுமதிக்கலாம் என்பதும் அதிகமான இளைய தாரங்களின் கருத்து நிலையாக இருக்கிறது. மூன்றில் இருபங்கு இளைய தரங்களின் கருத்து நிலையின் படி பலதாரமணம் மூலம் பெண்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் என இவர்கள் குறிப்பிடுகின்றனர். அனைத்து மனைவிகளையும் சமமாக நடத்த வேண்டியதன் அவசியம் மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமானால் மட்டுமே இரண்டாவது மனைவியை ஏற்றுக்கொள்வது (ஜமீலா, 2005) தொடர்பில் பெரும்பாலான பெண்கள் உடன்படுகிறார்கள். மறுபுறம் ஒரு சில இளைய தாரங்களின் கருத்துநிலை இதற்கு மாற்றமாக அமைந்துள்ளதையும் காணலாம். காரணம் தமது மறுமணத்தின் மூலம் தாம் இரட்டிப்பளவு மன வேதனைகளை உணர்வதாகவும் தனது கணவனால் ஒழுங்காக பராமரிக்கப்படாமல் கஷ்டத்தை அனுபவிப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். குடும்ப வாழ்வில் தமது கணவர் மூத்த மனைவியுடன் செலவழிக்கும் நேரம் அதிகம் என்பதால் தனது வீட்டுக்கு ஆண் பாதுகாப்பு குறைவு என்பது அநேகமான பெண்களின் கருத்துநிலையாக இருக்கிறது. எனவே இவர்களின் கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களை கொண்ட குடும்பங்களில் பெண்களுக்குரிய பாதுகாப்புச் சிக்கல்கள் எழக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகத் தெரிகிறது.

### 3.3. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உறவு

அநேகமான பலதார குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் முன்பள்ளிப் பருவ வயதினையுடைய பிள்ளைகளாக உள்ளதனை அறிய முடிகிறது. தமது கணவன்மார்கள் தமது பிள்ளைகளுடன் அன்பாகவும் அதிக அக்கறையுடன் இருப்பதாகவும் அதிகமான பெண்கள் குறிப்பிடுகின்றனர். இன்னும் தம் கணவரின் முதல் மனைவியுடன் தமது பிள்ளைகள் எவ்வித தொடர்புகளையும் பேணாமல் இருப்பதே தமக்கு உகந்தது என அநேகமான பெண்கள் குறிப்பிடுகின்றனர். பிள்ளைகள் நோயுற்றிருக்கும் சமயங்களில் அவர்களுடன் நேரத்தினை செலவிடல், சேமிப்புக்களை மேற்கொள்ளல், முன்பள்ளி பாடசாலைக்கு அழைத்துச் செல்லுதல், பிள்ளைகளை வெளி இடங்களுக்கு அழைத்துச் செல்லல் போன்ற விடயங்களினூடாக தந்தை பிள்ளைக்கு இடையிலான உறவு ஆரோக்கியமாக இருப்பதாக பெரும்பாலான இளைய தாரங்கள் குறிப்பிடுகின்றனர். ''நாங்கள் திருமணம் செய்து ஒன்பது வருடங்கள் ஆகின்றன. தற்போது எங்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர். இரண்டாவது

மனைவியாக இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் எப்போதும் துணையாக இருக்கிறார்''(நபர் B, 2020). எனவே பலதாரமணமானது தந்தை-பிள்ளை உறவில் எவ்வித பாதகத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதே அதிகமான இளைய தாரங்களின் கருத்துநிலையாக இருக்கிறது.

### 3.4. சக மனைவிமார்களுக்கு இடையிலான உறவு நிலை

பெரும்பாலான இளைய தாரங்களின் கருத்துக்களின் அடிப்படையில சக மனைவிகளிடையே ஒற்றுமையின்மை நிலவுவதாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. அநேகமான பெண்கள் தனது கணவனின் இணை மனைவியை தனது விரோதியாக காணும் அதே நேரம் அவர்களுடன் சண்டை பிடித்தல், பட்டப்பெயர் வைத்தல், திட்டுதல் போன்றவற்றினை செய்யக் கூடியவர்களாகவும் தமது கணவர் தனது அவரது முதல் மனைவியைப் பற்றி பேசுவதை விரும்பாதவர்களாகவும் உள்ளனர். அதுமட்டுமன்றி தமது கணவனின் முதல் மனைவியுடன் போட்டி போடக்கூடியவர்களாக இருக்கிள்றனர். காரணம் சில சமயங்களில் தமக்கு கணவனினால் கிடைக்கக் கூடிய பொருட்கள் மற்றும் பணம் என்பன சக மனைவியினால் தடுக்கப்படலாம் (மீக்கர்ஸ், 1995). என்று பெண்கள் அபிப்பிராயப்படுகின்றனர். எனவே இந்நிலையானது வீடுகளில் உள்ளவர்களுக்கு இடையே மோதலை ஏற்படுத்தும் ஒரு காரணியாக அமைகிறது. இந்நிலையே கிண்ணியா வாழ் பலதார குடும்பங்களுக்கு மத்தியிலும் காணப்படுகிறது. குடும்பத்தில் கணவனுடனான பிரச்சினைகள் பெரிதாக இல்லாவிட்டாலும் இனை மனைவியுடனான பிரச்சினைகளே அதிகமாக இருப்பதாக தெரிகிறது. கால்வாசிக்கும் குறைவான இளைய தாரங்கள் திருமணத்தின் மூலம் வீட்டில் சண்டை, பயம், அவமானம் போன்ற நிலைகளுக்கும் உள்ளாகி இருக்கிறார்கள் என்பதனை நேர்காணல்களின் மூலம் அறிய முடிகிறது. காரணம் தனது மறுமணத்துக்குப் பின்னால் தனது வீட்டாருடனும் கணவனின் முதல் மனைவியுடனும் ஏற்பட்ட மனக்கசப்புகள் இன்று வரையும் தொடர்கின்றன என்பது அநேகமான பெண்களின் கருத்தாக இருக்கின்றது. எனவே பலதாரமண வாழ்வில் கணவனின் முதல் மனைவியின் செல்வாக்கு தமக்கு எவ்வித நலனையும் ஏற்படுத்தவில்லை என்பது பெரும்பாலான இளைய தரங்களின் கருத்து நிலையாக இருக்கிறது. அதுமட்டுமன்றி தாங்களும் தமது பிள்ளைகளும் கணவனின் முதல் மனையின் குடும்பத்துடன் உறவு பேணுதலையும் விரும்பவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். எனினும் அநேகமான பெண்கள் தம் கணவனின் குடும்பத்துடன் சிறந்த முறையில் உறவினைப் பேணி வருவதாகவும் குறிப்பிடுகின்றனர். எனினும் கணவனின் உறவினர்களுடன் சுதந்திரமாக பழகுவதில் ஒரு வித தயக்க உணர்வு ஏற்படுவதாகவும் அதிகமான பெண்கள் குறிப்பிடுகின்றனர். ''நான் அவரை திருமணம் செய்த போது அவரது முதல் மனைவியுடன் மோதல் ஏற்பட்டது. அவள் ஒருபோதும் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. அவளுடைய மறுப்பைக் காட்ட அவள் வீட்டை விட்டு வெளியே சென்றாள். இருந்தாலும் அவள் அவருடைய மனைவி என்று எங்கள் உறவில் எப்போதும் ஒரு உணர்வு இருக்கிறது.''(நபர் C, 2020). பலதாரமண மற்றும் ஒற்றைத் திருமண மனைவிகளின் திருமணத்திற்கு இடையிலான உறவைத் தீர்மானிப்பதில் மனைவிகளிடையே வெவ்வேறு சமூகவியல் மாறுபாடுகள், மனச்சோர்வு குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் இருப்பதாக அலி மற்றும் பத்மா (2013) ஆகியோர் குறிப்பிடுவதைப் போல அதிகமான இளைய தாரங்களும் தமது கணவனின் பெற்றோர் மூத்த மருமகளுக்கே அதிக வரவேற்பு கொடுத்து கவனிப்பதால் தாம் கவலை அடைவதாகக் குறிப்பிடுகின்றனர். எனவே பலதாரமண வாழ்வில் தமது கணவனின் குடும்ப உறுப்பினர்களுடன் சுதந்திரமாக நெருங்கி பழகுவதில் ஒரு வகை தயக்கம் இருக்கும் என்பது அதிகமான பெண்களின் கருத்துநிலையாக இருக்கிறது. ஆரம்பத்தில் எனது கணவரின் முதல் மனைவியைப் போல எனக்கு மரியாதை கொடுக்கப்படவில்லை. இருப்பினும் சில வருடங்களுக்குப் பின்னர் நான் அவரது உறவினர்களுடன் நட்பை உருவாக்கிக்கொண்டேன். அவர்கள் என்னை முழுமையாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவர்கள் என்மீது கொஞ்சம் மரியாதை வைத்திருக்கிறார்கள் என்று உணர்கிறேன். காரணம் என் குழந்தையை அவரது உறவினர்கள் சேர்த்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்''(நபர் D, 2020). பொதுவாக பலதார குடும்பங்களிலுள்ள பெண்கள் இணை மனைவிகளுடன் பொறாமைப்படுவதால் (முல்டர், 1992). அவர்கள் உள

ரீதியில் காயப்படும் நிலையேற்படுகிறது (கிரனாவி,1998). இந்நிலை தொடருமெனின் காலப்போக்கில் அவர்கள் மனநோயாளிகளாகவும் மாறலாம் (சேலிபி, 1987).

### 3.5. சமூக வாழ்வு

பலதாரமணமானது சமூக வாழ்வில் குறிப்பிடக்கூடிய பங்கினை வகிப்பதாக கிரனாவி (2000) குறிப்பிடுகிறார். கிண்ணியா கலாசாரத்தை பொறுத்தவரை பலதாரமணம் என்பது பொதுவான திருமண நடைமுறையாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை ஆதலால் ஒருவர் இரண்டாவது திருமணம் செய்தால் அவரை வித்தியாசமான கண்ணோட்டத்திலேயே சமூகம் பார்க்கிறது என்பதை இளைய தாரங்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இளைய தாரங்களினைப் பொறுத்தவரை அவர்கள் திருமண வாழ்வுக்குப் பின்னர் சமூகத்துடனான செயற்பாடுகளில் இருந்து சற்று விலகியவர்களாக உள்ளனர். ஏனெனில் அநேகமான பெண்கள் தாம் வாழும் சமூகத்தின் மத்தியில் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக உணர்வதாக குறிப்பிடுகின்றனர். எனவே <u>ஒற்றைத்தாரங்களை விடவும் பலதார குடும்பங்களிலுள்ள மனைவிமார்கள் குறைந்த சுயமரியாதை, மன அழுத்தம் போன்றவற்றுக்கு உள்ளாகிறார்கள் (Krenawi, et al ٢٠٠٢).</u> இன்னும் அவர்கள் தம் கணவனுடன் வெளியிடங்களுக்கு பயணித்தல் குறைவாகும். காரணம் தனது கணவனின் முதல் மனைவியால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள், சமூக விமர்சனம், இன்னும் கணவன்மார்களும் அவர்களை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதில் தயக்கம் காட்டுபவர்களாக உள்ளதாக பெண்களின் பதில்களில் இருந்து அறிய முடிகின்றது. கிண்ணியா கலாசார சூழலில் ஒரு பலதார குடும்பத்தில் பயணிக்கும் இரண்டாவது மனைவிக்கான சமூக அங்கீகாரம் முதல் மனைவியை விடவும் குறைவாகவே வழங்கப்படுவது விவாதிக்கப்பட வேண்டிய அம்சமாக இருக்கிறது. இளைய மனைவி என்றாலே அவள் பிறரால் விமர்சிக்கப்படுவது நடைமுறையில் சாதரணமாகி விட்டது போல் இருக்கிறது. மேலும் சமூகத்தில் உள்ள சிலரால் தாங்கள் விமர்சனம் செய்யப்பட்டாலும் தமது சுயகொளரவத்தினை பேணி நடப்பதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். பொதுவாக ஒற்றைப் பெண்களுடன் ஒப்பிடும்போது பலதார குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு மன-சுகாதார பிரச்சினைகள், மனச்சோர்வு, பதட்டம், விரோதப் போக்கு, மனநோய் மற்றும் குறைவான் திருமண திருப்தி, சிக்கலான குடும்ப செயல்பாடு மற்றும் குறைந்த சுயமரியாதை ஆகியவை குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக லிண்ட்சே (2012) உறுதிப்படுத்துகிறார். இத்தகைய நிலைகளே அநேகமான இளைய தாரங்களுக்கு மத்தியிலும் இருப்பதாக ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

## 4. முடிவுரை

பலதாரமண வாழ்வில் ஒவ்வொரு பெண்ணினதும் அறிவு நிலை, அனுபவம், சூழல் என்பன ஆளுக்காள் வித்தியாசப்படுகிறது. சுயவிருப்பம், விவாகரத்து, சமூக இடைவினைகள் என்பன பலதாரமணத்துக்குரிய அகநிலை காரணிகளாக அமைகின்றன. கணவனினால் கிடைக்கும் அன்பு மற்றும் ஆதரவு போன்ற விடயங்களில் பெரும்பாலான இளைய தாரங்கள் திருப்தியை உணர்கின்றனர். பலதாரமணத்தின் பொருத்தத்தைப் பற்றி இருவேறுபட்ட கருத்து நிலைகள் கிண்ணியா வாழ் பலதாரமணியாளர்களுக்கு மத்தியில் காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் பெரும்பாலான (7 பேர்) இளைய தாரங்களுக்கு மத்தியில் பலதாரமணம் குறித்த சார்புநிலை வாதங்கள் மேலோங்கிக் காணப்படுவதும் அநேகமான பெண்களுக்கு மத்தியில் பலதாரமணம் குறித்த எதிர்மறைக்கருத்து நிலைகள் காணப்படுவதும் ஆய்வின் முடிவாக அமைந்துள்ளது. இன்னும் பலதாரமணம் மூலம் இஸ்லாம் பெண்களின் நிலையை சௌகரியப்படுத்தியுள்ளது என்பதில் அதிகமான பெண்கள் உடன்படுகிறார்கள். முஸ்லிம் குடும்பங்களுக்கு பலதாரமணம் பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல். பெண்கள் உரிமை தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளல், பலதாரமணத்தை ஒழுங்குபடுத்தும் கொள்கைகளை வளர்ப்பதற்கான முயற்சிகளை சட்ட வரைவுதாரர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும் போன்ற சில பரிந்துரைகளையும் இந்தக் கட்டுரை அறிவுறுத்துகிறது.

**உசாத்துணை**

ஹஸனாஹ்.(2015).*இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநீதி முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டமும் இஸ்லாமிய சட்டமும்.* தெஹிவளை: இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.

சூளனி. (2009). இலங்கையின் முஸ்லிம் குடும்ப சட்டம். கொழும்பு: முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

Adi Abdul, H. Modern problems classical solutions an Islamic perspective on the family. *compartive family studies 5:2* 37-54

Ali Ozer, fatma ozlem orhan & hasan cetin ekerbicer. (2013). Sociodemographic variables and depression in Turkish women from polygamous versus monogamous families *health care for women international*, 34:11, 1024-1034

Alima Nachiya. H. Family life experience. Interview. 08.march.2020. Munaichenai.

Al-Krenawi, Alean & Graham, John & Al-Krenawi, Salem. (1997). Social Work Practice with Polygamous Families. *Child and Adolescent Social Work Journal.* 14. 445-458.

Ameenah, bilal , P. & Jamila, j.(2005). *polygamy in islam*. (2nd ed.) . Riyadh : international Islamic publishing house.

Arif, Y. & Fatma,Y . (2018). Syrian Woman's View of Polygamy . *The Eurasia Proceedings of Educational & Social Sciences (EPESS)* 10 P. 223-233

Asghar. (2016). the rights and duties of spouse in viewpoint of koran and jurisprudence. *International journal of academic Research in Business and Social sciences.2 (1) ISSN: 2222-6990*

Borgerhoff-Mulder, M. (1992). Women's strategies in polygamous marriage: Kipsigis, Dotoga, and East African cases. *Human Nature*. 3 (1), 45-70

Chaleby, K. (1985). Women of polygamous marriages in inpatient psychiatric services in Kuwait. *Journal of Nervous and Mental Disease*.173 (1), 56-58.

Heedhar .J. (2005).There are Worse Things Than Being Alone : Polygamy in Islam,Past, Present, an Future. *William & Mary Journal of Women and the Law*. 11 *(3)* P. 563-596.

Khasawneh,O., Hijazi, A., & Salman, N. (2011).Polygamy and Its Impact on the Upbringing of Children: A Jordanian Perspective.*Comparative Family Studies, 42*(4),563-577

Mabaso, Malope, N.F. & Simbayi,L.C. (2018). Socio-demographic & behavioural profile of women in polygamous relationships in South Africa: A retrospective analysis of the 2002 population-based household survey data. *BMC Women's Health*18,133

Meekers, Dominique and Nadra Franklin 1995 Women's Perceptions of Polygyny among the Kaguru of Tanzania. *Ethnology* 34(4):315- 329.

Person A. polygamy life and social chellanges.Interview. 05.march.2020. Idiman

Person B.family structure. Interview. 08.march.2020. Mahroofnagar.

Person C. husband and wife relationship in polygamious family. Interview. 07.march.2020 . Annalnagar.

Person C. family relationship. Interview. 07.march.2020 . Annalnagar.

Shepard, Lindsay. (2012). The impact of polygamy on women's mental health: A systematic review. *Epidemiology and psychiatric sciences*. 22. 1-16.

Thobejane, Tsoaledi & Flora, Takayindisa. (2014). An Exploration of Polygamous Marriages: A Worldview. *Mediterranean Journal of Social Sciences.* 5. 1058-1066.